# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா

முனைவர் ம. பிரகாஷ்

தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி.

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா
முனைவர் ம. பிரகாஷ்



தமிழ்த்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக்
குழுவின் 'ஏ' தகுதி ஐ.எஸ்.ஓ.
9001:2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி - 642 001

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்புக்குழு

முனைவர் த.பரமேசுவரி(துறைத்தலைவர்),
முனைவர் த. கீதாஞ்சலி,
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா,
முனைவர் ம. சித்திரகலா, முனைவர் ந. பிரகாஷ்,
முனைவர் மு. சுகந்தி, முனைவர் இரா. ஜெயந்தி,
பேரா. ர.சூர்யா, பேரா. அ. மகபுபூ.


முதற்பதிப்பு : டிசம்பர், 2018

வெளியீடு : டுடே பதிப்பகம்
192, பெல்ஸ் சாலை,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

கணினி : டுடே கிராபிக்ஸ்

அச்சாக்கம் : டுடே பிரிண்டர்ஸ்
14/192, பெல்ஸ் ரோடு,
எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ், சென்னை-05.
அலைபேசி:98400 83738 / 044-2855 3797

பக்கங்கள் : xxiii + 483 = 506

விலை : ரூ.420/-

ISBN : 978-93-87882-47-8

# பொருளடக்கம்

1. தமிழ் இலக்கியங்களில் இறை இயல் காட்டும் படிநிலை வளர்ச்சிகள்
முனைவர் அமுதன் 1

2. திருமுறைகளில் திருக்குறள்
N.S. அசோக்குமார் 7

3. சிலப்பதிகாரம் காட்டும் அரசியல் அறம்
பா. அந்தோனியம்மாள் 15

4. பரிபாடலில் திருமால் வழிபாடு
முனைவர் ப. அருள்ஜோதி 19

5. தமிழ் இலக்கியத்தில் இறைநெறி
அனிதா 26

6. இசுலாமியத் தமிழிலக்கியம் காட்டும் இறைநெறிகள்
முனைவர் இரா. ஆரோக்கியமேரி 32

7. தமிழ்ச் சித்தர் இறைநெறி
முனைவர் வெ. இராம்ராஜ் 38

8. திருக்குறளில் இறைமை நெறி
பேரா. முனைவர் இலலிதாசுந்தரம் 46

9. திருமுருகாற்றுப்படையும் தெய்வம் போற்றும் மரபும்
முனைவர் வே. கண்ணதாசன் 53

10. சர்வமும் இறைமயம்
பேரா. பா. கலைச்செல்வி 61

11. நிலம் சார்ந்த இறைநெறி
ம. காயத்ரி 64

12. ஔவையின் பார்வையில் இறைவன்
முனைவர் உ. கிருஷ்ணன் 70

13. சைவசமயமும் இறைநெறியும்
முனைவர் த. கீதாஞ்சலி 77

14. சங்க இலக்கியத்தில் திருமால் வழிபாடு
முனைவர் ச. குருஞானாம்பிகா 83

15. ஆதிரையான் – ஆடவல்லான் வழிபாட்டு வளர்ச்சி நிலை
ர.கோவர்தனன் 88

16. திருவள்ளுவர் வரையறுத்த இறைநெறிக் கோட்பாடு 97
திருக்குறள் தூதர் ம. சக்கரவர்த்தி

17. கண்ணதாசன் கவிதைகளில் இறைநெறிகள் 106
இரா. சங்கரேஸ்வரி

18. நால்வரின் பக்தி நெறிகள் 112
ப. சவிதா

19. அவ்வை குறட்பாக்களில் சைவ சித்தாந்த நெறி 119
முனைவர் சே. சாந்தி

20. இலக்கியங்களில் இறைநெறியின் நோக்கும் போக்கும் 125
முனைவர் ம. சித்ரகலா

21. நாட்டுப்புறத் தெய்வங்களும் திருவிழாக்களும் 135
A. சிவபாக்யம்

22. பகுத்தறிவு – வழிபாட்டு நெறி 142
முனைவர் மு. சுகந்தி

23. அனுராதாரமணன் நாவல்களில் இறைநெறிகள் 148
கி. சுந்தரம்

24. பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்களுள் இறைமைப் பெண்கள் 153
பேரா. ர. சூர்யா

25. மனித மனமும் இறையும் 158
முனைவர் ந. ஜெயசுதா

26. குலசேகர ஆழ்வாரின் பக்திநெறி 162
முனைவர் இரா. ஜெயந்தி

27. சங்க இலக்கியத்தில் செவ்வேள் 168
முனைவர் ஜமுனாசெல்வராஜ்

28. தொல்காப்பியத்தில் இறைநெறி 173
மு. செல்வகுமார்

29. செவ்விலக்கியத்தில் மாயோன் வழிபாடு 182
முனைவர் ம. தமிழ்வாணன்

30. ஆழ்வார் பாசுரங்களில் – அகநெறி 193
ந. திருமால்

31. நீலகிரி தொரையரின் கோவில் அமைப்பு முறை 196
ம. தீபா

32. இறைநெறியில் முருக தத்துவம் 202
முனைவர் கி. துர்காதேவி

33. திருமுருகாற்றுப்படையில் இறைநெறி
முனைவர் யு. துர்காதேவி 209
34. இருக்க இயலாத இறைநெறிகள்
Dr. K.I.N. DEIVA AKANDAN ARAMAN 215
35. அறநெறியின் இறைநெறிகள்
திருக்குறள் தூதர் சு. நடராசன் 222
36. திருக்குறள் உணர்த்தும் இறையியல் கோட்பாடு
முனைவர் நயம்பு.அறிவுடைநம்பி 227
37. குறிஞ்சி நிலத் தெய்வம்
த. நர்மதா தேவி 235
38. நாகூர் ரூமியின் சிறுகதைகளின் வழி காணப்படும் இசுலாமியக் கருத்துகள்
கா. நஸ்ரீன் பாத்திமா 240
39. தமிழ் இலக்கியத்தில் முருகவழிபாடு
அ. நித்யா 245
40. இராமனின் இறைநெறிக்கொள்கை
முனைவர் வெ. நிர்மலா 250
41. சமணம் சுட்டும் இறைநெறி
முனைவர் ஜெ. நீலாக்சி 258
42. பாரதியாரின் இறைநெறி
முனைவர் ஏ. பச்சையப்பன் 262
43. திருப்பாவையில் இறைநெறி
வீ. பவானி 271
44. இறைநெறியில் புதுக்கவிதை – ஓர் ஆய்வு
முனைவர் கோ.வ. பரத்வாஜ் 278
45. திருமுருகாற்றுப்படை – சுவையும் சொல்லாக்கமும்
முனைவர் இரா. பன்னிருகைவடிவேலன் 283
46. வைணவ இலக்கியத்தில் ஆண்டாளின் இறைநெறி
முனைவர் ச. பாக்கியலஷ்மி 299
47. திருமூலர் கூறும் துறவு மார்க்கம்
முனைவர் ஜீ. பாண்டியலட்சுமி 305
48. பரிபாடலில் திருமால் செவ்வேள் வழிபாடு – ஓர் ஒப்பீடு
இரா. பிரகாஷ் 312

49. தமிழ்ச் சமூக வரலாறு: முருகனின் பரிமாணங்கள் 320
முனைவர் ம. பிரகாஷ்

50. பட்டினத்தார் பாடல்களில் இறையுணர்வு 326
ப. பிரதாப்

51. திருக்காளத்திப்புராணம் காட்டும் கண்ணப்பரின் இறைநெறி 333
ப. பிரியா

52. பெரியபுராணமும் : விவிலியம் காட்டும் இறைநெறிகள் 338
பா. பூங்காவனம்

53. விவிலியம் காட்டும் இறைநெறி 343
சு. பெர்சியா ஜீவபாய்

54. டி. செல்வராஜ் நாவல்களில் இறைநெறி 348
முனைவர் பி. மஞ்சுளா

55. சமயங்கள் வளர்த்த தமிழ் 353
அ. மகபூபு

56. தமிழ் இலக்கியங்களில் இறைநெறி 364
முனைவர் ச. மதுரா

57. சங்ககால நாடறி நன்மணமும் தாலியும் 369
முனைவர் த. மலையரசி

58. திருமுருகாற்றுப்படையும் இறைநெறியும் 374
முனைவர் மு.தேவராஜ்

59. திரு.வி.க.வின் பொதுமை நோக்கிய சைவம் 383
பேராசிரியர் ப. மகாலிங்கம்

60. இலக்கியத்தில் ஆழ்வார்களின் இறைநெறி 389
முனைவர் பே. மகேஸ்வரி

61. இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா உணர்த்தும் இறைநெறி 395
பேராசிரியர் முனைவர் வே. மாணிக்கம்மாள்

62. திருவள்ளுவரின் கடவுள் கொள்கை 402
முனைவர் முகிலை இராசபாண்டியன்

63. சிலப்பதிகாரம் கூறும் இறைவழிபாட்டு மரபுகள் 407
அ. முத்துகிருஷ்ணன்

64. கம்பனில் வைணவ நெறி 411
முனைவர் சி. முத்துமாலை

65. தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள் 419
க. முருகேசன்

66. திருவள்ளுவர் வரையறுத்த மனிதத் தெய்வக் கோட்பாடுகள்
முனைவர் கு. மோகனராசு 425

67. நாட்டுப்புற பாடல்களில் இறைவழிபாடு
முனைவர் ராதிகா மேகநாதன் 431

68. புரட்சித்துறவி வள்ளலாரின் இறைநெறி
முனைவர் த. ராஜீவ்காந்தி 437

69. இலக்கியங்களில் நடுகல் வழிபாட்டுமுறைகளும், தற்கால வழிபாட்டுமுறைகளும்
முனைவர் வே. வளர்மதி 442

70. சங்க இலக்கியத்தில் திருமால்
வி. வாசுதேவன் 448

71. பன்னிரு ஆழ்வார்களின் பக்திநெறி
து. விசாலாட்சி 456

72. சங்க இலக்கியங்களில் சிவ வழிபாடு
ரா. ராஜா 466

73. FACTS OF INCOME INEQUALITY IN INDIA
SHAHUL HAMEED, NGOZI ADELEYE, M. ABDUL JAMAL 473

ISBN : 978-93-87882-47-8 

# 24. பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்களுள் இறைமைப் பெண்கள்

**பேரா.ர.சூர்யா**
உதவிப்பேராசிரியர்,
என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி

## முன்னுரை

ஊர்ப்பெயர்கள் காலப்போக்கில் ஒரே பெயர்களைக் கொண்டு பல ஊர்கள் தோன்றும் பொழுது அவ்வூர்ப் பெண்களை வேறுபடுத்திக் காட்டுவதற்கு என சிறப்புக்கூறுகள் தோன்றின. இவ்வாறு அமையும் சிறப்புக்கூறுகளில் இறைவனது பெயர்களைக் கொண்டு அமைந்த ஊர்களைக் குறித்த செய்திகளை எடுத்தாளும் விதமாக இக்கட்டுரையானது அமைகிறது.

## சிறப்புக்கூறுகள்

சிறப்புக்கூறுகள் விளக்கப் பெயரடை, ஆட்பெயரடை, பிறவகைப் பெயரடை என மூவகை ஆகும். சிறப்புக்கூறுகளை விளக்கப் பெயரடை, ஆட்பெயரடை, பிறவகைப் பெயரடை என மூவகையாகப் பிரிக்கின்றனர் என (நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.326) என்ற நூலில் டாக்டர் சு.சக்திவேல் அவர்கள் குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகிறது.

இக்கூறுகளில் பிறவகைப் பெயரடை என்னும் பிரிவில் அமைந்த இறைவனின் பெயர்களில் அமைந்த ஊரின் தன்மைகள் யாவும் சிறப்பானவையே ஆகும்.

## தெய்வப் பெயரால அமைந்த ஊர்கள்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பழமொழி. மனிதனின் வாழ்வில் தெய்வ வழிபாடு என்பது இயல்பான ஒன்றாக அமைகின்றது. பணடைக்காலம் முதல் மரம், மழை, நெருப்பு, இடி, ஞாயிறு, திங்கள் போன்ற

அனைத்தையும் தெய்வமாகக் கருதி வழிபட்டு வருகின்றனர். எண்ணற்றோர் நீராடிவிட்டு 'ஞாயிறை வழிபடும்' தன்மையினைக் காணமுடிகின்றது. இவ்வாறு இவைகளை வழிபடக் காரணமாக அமைவது இவை அனைத்தும் புனிதமானதாகக் கருதப்படுவது தான்.

'கடலோடு கலக்கும் ஆறுகள் போல் எல்லாத் தெய்வ வணக்கமும் என்னையே அடைகிறது என்று கண்ண பிரான் சொல்வதுண்டு. ஆறுகளைக் கூட எண்ணிடலாம். ஆனால் தெய்வங்களையும் தேவதைகளையும் எண்ணுவதும் எழுதுவதும் அரிதினும் அரிது' என்று சண்முக சுந்தரம் குறிப்பிடுகின்றார்.

எனவே ஊர்ப்பெயர்களின் தோற்றத்திற்கு தெய்வங்களின் பெயர்களும், தேவதைகளின் பெயர்களுமே காரணமாக அமைந்திருக்கலாம். தெய்வங்கள் தொடர்பான பெயர்கள் ஊர்ப்பெயர்களாக அமைந்திருக்கின்றது. சான்றாக, அவதாரப் பெயர்கள், புராணக் கதைகள் போன்றவைகள் ஆகும். மக்கள் தெய்வத்தினை வழிபடுவதற்குக் காரணம் மக்கள் மனதில் தெய்வத்தைக் காணும் பொழுது அவர்கள் மனதில் பயமும் பக்தியும் ஏற்படுகின்றது. இதன் காரணமாகவே மக்கள் தெய்வத்தினை வழிபடுகின்றனர்.

## சிறுதெய்வம், பெருந்தெய்வம் தொடர்பான ஊர்ப்பெயர்கள்

தெய்வ வழிபாட்டில் இருவகையான வழிபாடுகள் இருக்கின்றன. அவை சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என்பவை ஆகும்.

அடித்தளத்து மக்கள் வழிபடும் கடவுளரைச் சிறுதெய்வங்கள் எனவும் மேல்தளத்து மக்கள் வழிபடும் தெய்வங்களைப் பெருந்தெய்வம் எனவும் குறிப்பிடும் வழக்கம் அக்காலத்திலேயே இருப்பதாகத் தெரிகிறது. என்று நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள் என்ற நூலில் தே.லூர்து அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சிவன், திருமால், முருகன் போன்ற தெய்வங்கள் உயர்வானவை என்ற பொருளையே பெருந்தெய்வங்களின் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு ஊர்பெயர்கள்

ISBN : 978-93-87882-47-8

அமைந்துள்ளன. உலகிலுள்ள மக்கள் நன்மைகளை அளக்கவும் தீமைகளைப் போக்கவும் இறைவனை வழிபடுகின்றனர். இறைவன் இவர்கள் வேண்டுவதற்கு இணங்கி நன்மைகளைச் செய்வதினால் மக்கள் தெய்வத்தின் பெயரையே நம்பிக்கையாக வைத்து ஊர்ப்பெயர்களை அழைத்து வருகின்றனர்.

சைவ சமயத்தினர் சிவனைத் தெய்வமாக எண்ணி வழிபடுகின்றனர். சிவபெருமானின் பெயர்களை வைத்து எண்ணற்ற ஊர்கள் காணப்படுகின்றன. அவை சுந்தரம்-சுந்தரகவுண்டனூர், சித்தன் - சித்தூர், சோமந்துறைச் சித்தூர், நஞுசுண்டன் - நஞுசுண்டாபுரம் என்று சிவ பெருமானின் பெயர்கள் கொண்ட ஊர்கள் இப்பகுதியில் அமைந்துள்ளன.

அதே போல், வைணவ சமயத்தினர் திருமாலை தெய்வமாக எண்ணி வழிபடுகின்றனர். திருமாலின் அவதாரப் பெயர்களைக் கொண்டு எண்ணற்ற ஊர்கள் அமைந்துள்ளன. அவை கோபாலன் - கோபாலபுரம், சீனிவாசன் - சீவாசபுரம், கோவிந்தன் - கோவிந்தாபுரம், இராமன்- இராமச்சந்திராபுரம், இராமபட்டணம், ரங்கன் - ரங்கசமுத்திரம், ரங்கம்புதூர் போன்ற ஊர்கள் திருமாலின் பெயர்கள் கொண்ட ஊர்கள் ஆகும்.

இவைமட்டுமல்லாமல் ஆனைமலையில் உள்ள மாசாணியம்மன் கோயிலுக்கு இராமன் வந்து வழிபட்டுச் சென்றதாக புராணக் கதைகள் கூறுகின்றன.

இந்நிலையில் முருகனின் பெயர்கொண்டும் ஊர்ப்பெயரானது காணப்படுகின்றது. வேல் என்பது முருகப்பெருமானின் வைப்புப் பொருளாக கருதப்படுகின்றது. இதனைக் கொண்டு 'வேல்ராம்பாளையம்' என்ற ஊர் இருப்பதைக் காணமுடிகின்றது.

எனவே இவ்வாறு அமைந்த ஊர்கள் பெருந்தெய்வங்கள் தொடர்பான ஊர்ப்பெயர்கள் ஆகும்.

### சிறுதெய்வம் பெயரில் அமைந்த ஊர்ப்பெயர்கள்

சிறுதெய்வக் கோயில் என்பது ஆகமவிதிகளுக்கு உட்படடு கட்டப்பட்டவையாக இருக்காது. ஊயிர்பலியானது

இடம்பெறுகின்றது. தெய்வம் மனிதர் மீது இறங்கி வருகிறது. ஆறு காலப்பூசையும் நடைபெறுவதில்லை. சிறுதெய்வ வழிபாட்டில் காணக்கூடிய தெய்வங்களானது பெரும்பாலும் சாபங்களின் மூலமாகவும் கொலை செய்யப்பட்டதன் மூலம் உருவான தெய்வங்கள் என்றும் பெண் தெய்வங்கள் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டு அதன்மூலம் ஊர்ப்பெயர்கள் கொண்டு காணப்படுகின்றன.

## ஆண் தெய்வங்கள் தொடர்பான ஊர்ப்பெயர்கள்

சிறுதெய்வங்களின் பெயர்களாக காத்தவராயன், வேட்டைக்காரன், மல்லன், மாடன், முனி அப்புச்சி, மதுரை வீரன் போனறவைகள் குறிக்கப்படுகின்றன. இப்பெயர்களைக் கொண்டு ஊர்ப்பெயர்களும் அமைந்துள்ளன.

மாயாண்டி அப்புச்சி கோயில், வேட்டைக்காரன்புதூர், கெட்டிமல்லன் புதூர் என்ற ஊர்ப்பெயர்கள் காணப்படுகின்றன. வேட்டைத்தொழில்கள் அதிகம் நடைபெற்றதால் வேட்டைக்காரன் புதூர் என்று இவ்வூர் பெயர் பெற்றது என்று கூறுகின்றனர். ஆண் தெய்வத்தை வேட்டைக்காரன் என்று குறிப்பிடுவதனால் இவ்வூர் வேட்டைக்காரன்புதூர் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு இத்தெய்வங்களை நாட்டுப்புறத் தெய்வங்கள் என்று அழைக்கப்படுகின்றன. கிராமப்புற மக்களிடையே அதிகமான வரவேற்பைப் பெற்றுத் திகழ்கின்றது. தெய்வங்களின் பெயரைக் கொண்டு மட்டும் ஊர்ப்பெயர்கள அழைப்பதிலலை. இத்தெய்வங்களின் வாகனங்கள் , ஆயுதங்கள், பெருட்கள் போன்றவற்றைக் கொண்டும் ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன.

## பெண் தெய்வங்கள் தொடர்பான ஊர்ப்பெயர்கள்

சிறுதெய்வங்களில் பெண் தெய்வங்களின் பெயர்களாக அம்மன , ஆயி, ஆத்தாள், பிடாரி, மாரி, என்ற பெயர்கள் குறிப்பிடுகின்றன. இப்பெயர்களைக் கொண்டு ஊர்ப்பெயர்களும் அமைந்துள்ளன.

ஆண் தெய்வங்களைவிட பெண் தெய்வங்களுக்கே சக்தி அதிகமாக இருக்கீன்றது என்று கூறுகின்றனர். ஆண்

தெய்வங்களைக் காட்டிலும் பெண் தெய்வங்களுக்குப் பழிவாங்கும் குணம் அதிகம் என்றும் கூறப்படுகின்றது.இப்பெண் தெய்வங்களை மக்கள் அதிலும் பெண்கள் அதிகமாக வணங்குகின்றனர்.

பெண் சிறுதெய்வங்களின் பெயரைக் கொண்டு நோக்குகையில் மாரியம்மன், காளியம்மன், மாசாணியம்மன், அகிலாண்டீஸ்வரி, மீனாட்சியம்மன் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. இப்பெயர்களைக் கொண்டு ஊர்ப்பெயர்கன் காணப்படுகின்றன.

இப்பெண் தெய்வங்களை மக்கள் மழை வேண்டியும், பிணியிலிருந்து காப்பற்ற வேண்டியும், பெண்களுக்கு உடலளவிலும், மனதளவிலும் உள்ள பிரச்சனைகளையப் போக்கவும் வேண்டுமென்று வழிபட்டு வருகின்றனர்.

இச்சிறுதெய்வக் கோயில்களில் திருவிழாக்கள், வழிபாடுகள், சீரமைப்பு வேலைகள் மற்றும் பல வேலைகள் செய்வதற்கான செலவுகளை இக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களின் வருவாய் மூலம செய்து முடிக்கின்றனர். இது போன்று எண்ணற்ற கோயில்களிலும் செய்து வருகின்றனர்.

## முடிவுரை

அவ்வாறு நோக்குகையில் தெய்வப் பெயரால் அமைந்த ஊர்கள், சிறுதெய்வம், பெருந்தெய்வம் தொடர்பான ஊர்ப்பெயர்கள், ஆண்தெய்வங்கள் தொடர்பான ஊர்ப்பெயர்கள். பெண் தெய்வம் தொடர்பான ஊர்ப்பெயர்கள், என இவற்றின் அடிப்படையில் பொள்ளாச்சி வட்டார ஊர்ப்பெயர்களுள் இறைமையின் மீது வைத்துள்ள எண்ணங்கள், நம்பிக்கைகளின் காரணமாக ஊர்ப்பெயர்கள் பல அமைந்துள்ளன என்பதை தீர்மானிக்க இயலுகிறது.

XXX



ISBN 978-93-87882-47-8

9 789387 882478 >

நியூ டே பதிப்பகம்

192, பெல்ஸ்சாலை, சேப்பாக்கம்
சென்னை-5